**தமிழ்நாடு அரசு**
**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை**
**வட்டாட்சியர் அலுவலகம், திருப்பெரும்புதூர்**
**காஞ்சிபுரம் மாவட்டம்**

அறிவிக்கை எண்.2200/2025 நாள்.08.07.2025

காஞ்சிபுரம் மாவட்ட வருவாய் அலகில் திருப்பெரும்புதூர் வட்டத்தில் காலியாக உள்ள கிராம உதவியாளர் பணியிடங்களை நிரப்பிட தகுதிவாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. கீழே கொடுக்கப்பட்டுள்ள இட ஒதுக்கீடு, கல்வித் தகுதி மற்றும் வயது வரம்பிற்குட்பட்ட நபர்கள் மட்டும் விண்ணப்பிக்க வேண்டும்.

| | |
|---|---|
| விண்ணப்பங்கள் பெறப்படும் நாள் | 09.07.2025 |
| விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் | 07.08.2025 |
| எழுதுதல் திறனறித் தேர்வு நடைபெறும் நாள் | 08.09.2025<br>(மாறுதலுக்கு உட்பட்டது) |
| நேர்முகத் தேர்வு நடைபெறும் நாள். | 30.09.2025<br>(மாறுதலுக்கு உட்பட்டது) |

| | |
|---|---|
| பதவியின் பெயர் : | கிராம உதவியாளர் |
| சம்பள விகிதம் : | சிறப்பு காலமுறை ஊதியம்<br>Level 06 (ரூ.11,100 – ரூ.35,100/-) |
| வட்டத்தின் பெயர் : | திருப்பெரும்புதூர் |
| காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை : | நிரப்படப்படவுள்ள கிராமங்களின் விவரம் |
| 08 | 01, ஓட்டங்கரணை |
| | 02, சேந்தமங்கலம் |
| | 03, இராமனுஜபுரம் |
| | 04, ஆரனேரி |
| | 05, கிளாய் |
| | 06, மேட்டுப்பாளையம் |
| | 07, இருங்குளம் |
| | 08, நெமிலி அ |

**இனசுழற்சி விவரம் :**

| வ. எண் | இன சுழற்சி | வகுப்பு | முன்னுரிமை /முன்னுரிமையற்றவர் | பொது– ஆண்/ பெண் | விதவை/ முன்னாள் இராணுவத்தினர்/ மாற்றுத்திறனாளி |
|---|---|---|---|---|---|
| 1. | 77 | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் | முன்னுரிமை பெற்றவர் | பொது | அவசர காலத்தில் பிராந்திய படை மற்றும் துணை விமானப்படை மற்றும் துணை விமானப்படையில் சேர்க்கப்பட்டு தொடர்ச்சியாக ஆறு மாதத்திற்கு மேல் பணிபுரிந்து பின்னர் விடுவிக்கப்பட்டவர்கள்) |
| 2. | 78 | பிற்படுத்தப்பட்டோர் முஸ்லிம் | முன்னுரிமையற்றவர் | பொது | |
| 3. | 79 | பொதுப்பிரிவினர் | முன்னுரிமையற்றவர் | பொது | |
| 4. | 80 | பிற்படுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட்ட முஸ்லிம்கள் தவிர) | முன்னுரிமை பெற்றவர் | பொது | பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பு நிறுவன பணியாளர்கள் |
| 5. | 81 | பொதுப்பிரிவினர் | முன்னுரிமையற்றவர் | பெண் | PSTM (Person studied in Tamil Medium) தமிழ்மொழி வாயிலாக கல்வி பயின்றவர். |
| 6. | 82 | ஆதிதிராவிடர் | முன்னுரிமையற்றவர் | பொது | |
| 7. | 83 | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் | முன்னுரிமையற்றவர் | பொது | காது கேளாதோர் |
| 8. | 84 | பிற்படுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட்ட முஸ்லிம்கள் தவிர) | முன்னுரிமையற்றவர் | பெண் | |

| | |
|---|---|
| **கல்வித்தகுதி** | தமிழ்நாடு அரசுத் தேர்வுகள் இடைநிலைப் பள்ளி இறுதி வகுப்பு சான்றிதழ் தேர்வில் (SSLC– Secondary School Leaving Certificate Examination) **தமிழ் ஒரு பாடமாகக் கொண்டு தேர்வு எழுதப்பட்டிருக்க வேண்டும்**. (குறிப்பு – SSLC– (Secondary School Leaving Certificate Examination) **மதிப்பெண் பட்டியல் கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும்**) **(குறைந்தபட்ச கல்வித்தகுதி – பத்தாம் வகுப்பு தோல்வி)** |

| | |
|---|---|
| **இதர தகுதிகள்** | 1.விண்ணப்பதாரர் திருப்பெரும்புதூர் வட்டத்தை சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்.<br>2.தமிழில் பிழையின்றி எழுதப் படிக்க தெரிந்திருக்க வேண்டும்.<br>3.விண்ணப்பதாரர்கள் திருப்பெரும்புதூர் வட்டத்தை சேர்ந்தவர்களாகவும் அதே வட்டத்தில் நிரந்தரமாக வசித்து வருபவர்களாகவும் இருக்க வேண்டும். காலிப்பணியிடம் அறிவிக்கப்பட்ட கிராமத்தை சேர்ந்த விண்ணப்பதாரர்களுக்கு அக்கிராம பணியிடத்திற்கு முன்னுரிமை வழங்கப்படும். |
| **வயது வரம்பு** | குறைந்தபட்ச வயது –21 வயது நிறைவு செய்திருக்க வேண்டும்<br>(அனைத்து பிரிவினருக்கும்)<br>அதிகபட்ச வயது – 32 வயது –இதர வகுப்பினர்.<br>– 37* வயது – பிற்படுத்தப்பட்டோர் / மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் / பட்டியலினத்தவர் / பழங்குடியினர்.<br>(*அரசாணை (நிலை) எண்.91, மனிதவள மேலாண்மைத் (எஸ்) துறை நாள்.13.09.2021–படி வயது நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது)<br>**–மாற்றுத்திறனாளிகளுக்கு**<br>அதிகபட்ச வரம்புடன் 10 ஆண்டுகள் கூடுதலாக கணக்கில் கொள்ளப்படும். (Tamilnadu Government Servants (Conditions of Service) Act–2016)<br>**–முன்னாள் இராணுவத்தினருக்கு.**<br>48 வயது – இதர வகுப்பினர்.<br>53 வயது – பிற்படுத்தப்பட்டோர் / மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் / பட்டியலினத்தவர் / பழங்குடியினர். (Tamilnadu Government Servants (Conditions of Service) Act–2016) |
| **விண்ணப்பிக்கும் முறை** | • விண்ணப்பதாரர்கள் மேற்படி பணிக்கான விண்ணப்ப படிவத்தினை முழுமையாக பூர்த்தி செய்து உரிய ஆவண இணைப்புகளுடன் கீழ்கண்ட முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ விண்ணப்பிக்கலாம்.<br>**வட்டாட்சியர்,**<br>**வட்டாட்சியர் அலுவலகம்,**<br>**திருப்பெரும்புதூர் வட்டம்,**<br>**காஞ்சிபுரம் மாவட்டம்**<br>• மேற்படி பணிக்கான விண்ணப்ப படிவங்களை **https;//kancheepuram.nic.in/notice_category/recruitment/** என்ற இணையதள முகவரியை அணுகி பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். |

வட்டாட்சியர்,
திருப்பெரும்புதூர்